( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**


# முன்னோடிப் பரீட்சை - இல-14

# வினாத்தாள் - I

சுட்டெண்:- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) 


உரு A

கத்தரிக்கோலினால் ஒருமுறை மட்டுமே வெட்டுவதன் மூலம் உரு A யினால் காட்டப்பட்டுள்ள வடிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சதுர வடிவமான கடதாசியை எத்தனை தடவைகள் மடிக்க வேண்டும்?


(1) 4 தடவைகள் (2) 3 தடவைகள் (3) 2 தடவைகள்

(02) திண்மங்களின் நிழற்றப்பட்டுள்ள பகுதிகள் மிகச் சரியாக வரையப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.

(1) 
(2) 
(3) 




(03) 

உரு 1



உரு 2

கார்ட்போர்ட் துண்டினால் அமைக்கப்பட்ட நான்முகி ஒன்றை இரண்டு பக்கங்களிலிருந்து பார்க்கும்போது புலப்படும் ஒழுங்கை உரு 1, உரு 2 காட்டுகின்றன. இந்நான்முகியின் மூன்று முகங்களின் வெளிப்புறத்தில் வட்டம், சதுரம் மற்றும் முக்கோண வடிவங்கள் காட்டப்பட்டுள்ள முறைப்படி வரையப்பட்டுள்ளன. அதன்படி, கார்ட்போர்ட் துண்டை விரித்துப் பார்க்கும்போது காணக்கிடைக்கும் முறை,


(1) 
(2) 
(3) 

(04) கீழே கூட்டினுள் காணப்படும் சொற்களை நன்கு அவதானிக்குக. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாவிற்கான பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| |
|---|
| நாய், வேகமாக, வந்தது, கண், அழகான, விழுந்தது, வயல், ஓடியது, விரைவாக, பாடினான், இலகுவாக, திறமையான |

மேலே கூட்டினுள் அதிகமாகவுள்ள சொற்களின் வகை மற்றும் குறைவாக உள்ள சொற்களின் வகையை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) வினைச்சொற்கள், பெயர்ச்சொற்கள் (2) அடைமொழிகள், பெயர்ச்சொற்கள் (3) பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள்

* 


**இவ்வுருவினால் குறித்த நகரம் ஒன்றின் வீடுகள் அமைந்துள்ள முறைகளும் அவற்றின் இலக்கங்களும் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் (05), (06) ஆகிய வினாக்களுக்கான மிகச் சரியான விடைகளைத் தெரிவு செய்க.**

(05) கதிர் 18 ஆம் இலக்கத்தைக் கொண்ட வீட்டிலிருந்து தென்கிழக்கு – தெற்கு – கிழக்கு – தெற்கு – வடகிழக்கு – தென்கிழக்கு ஆகிய திசைகளுக்கு பயணித்தான். அதன்படி, அவன் சந்திக்கும் வீட்டின் இலக்கம்,

(1) 10 (2) 29 (3) 17

(06) டில்சான் 36 ஆம் இலக்கத்தைக் கொண்ட வீட்டிலிருந்து தென்மேற்கு – தெற்கு – மேற்கு – தெற்கு – வடமேற்கு – தென்மேற்கு ஆகிய திசைகளுக்கு பயணித்தான். அதன்படி, அவன் சந்திக்கும் வீட்டின் இலக்கம்,

(1) 42 (2) 15 (3) 26

(07)

| சமன் | அனில் | ரவி |
|---|---|---|
| பேனைகள் 2 | பேனை - 1 | அடிமட்டங்கள் 2 |
| அடிமட்டம் - 1 | அடிமட்டம் - 1 | பேனை - 1 |
| அழிறப்பர் - 1 | அழிறப்பர்கள் 4 | அழிறப்பர்கள்- 3 |

- **இரண்டு அழிறப்பர்களின் விலை = அடிமட்டம் ஒன்றின் விலை**
- **இரண்டு அடிமட்டங்களின் விலை = பேனை ஒன்றின் விலை**

மூன்று பிள்ளைகள் விலைக்கு வாங்கிய பொருட்களின் விபரங்கள் இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, மிகக் குறைந்த பணம் செலுத்த வேண்டியவர்,

(1) சமன் (2) அனில் (3) ரவி

kalvi.lk



(08) பெட்டியொன்றில் மஞ்சள் நிறப் பந்துகள் 16 உம், மஞ்சள் நிறமல்லாத பந்துகள் 20 உம், கறுப்பு நிறப் பந்துகள் 9 உம் உள்ளன. அதன்படி, பெட்டியிலுள்ள கறுப்பு நிறமல்லாத பந்துகளின் எண்ணிக்கை,


(1) 27 (2) 36 (3) 31

(09) என்னிடம் சம நீளமுள்ள ஈர்க்குத் துண்டுகள் இருந்தன. நான் அவ்வீர்க்குத் துண்டுகளால் ஒரு சதுரமுகியையும் இரு நான்முகிகளையும் அமைத்த பின் 4 ஈர்க்குத் துண்டுகள் மீதியாக இருந்தன. அதன்படி, என்னிடம் ஆரம்பத்தில் இருந்த ஈர்க்குத் துண்டுகளின் எண்ணிக்கை,


(1) 30 (2) 26 (3) 28


(10) காரியாலயமொன்றின் முன்னாலுள்ள கண்ணாடிக் கதவின் வெளிப்புறத்தில் 6937 எனும் எண் எழுதப்பட்டுள்ளது. அதன்படி, அக்காரியாலயத்தின் உள்ளே இருக்கும் ஒருவருக்கு அவ்வெண் புலப்படும் முறை,


(1) 7396 (2)  (3) 

(11) 


இவ்வுருவில் ஆங்கில எழுத்துக்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை தெரிவு செய்க.

(1) 


(2) 


(3) 


(12) ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். அதன்படி, மே மாதம் 29 ஆம் திகதி என்ன கிழமையாகும்?

(1) புதன்கிழமை (2) செவ்வாய்க்கிழமை (3) திங்கட்கிழமை

(13)

| 100m | 200m | 400m |
|---|---|---|
| தேவா | ஹசன் | தேவா |
| ஹசன் | தேவா | பாலா |
| அருண் | அருண் | ஹசன் |
| பாலா | பாலா | அருண் |

100m, 200m, 400m ஆகிய ஓட்டப் போட்டிகளில் நான்கு பிள்ளைகள் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்ட முறை அருகே காட்டப்பட்டுள்ளது. இவ்விபரங்களின்படி, நான்கு பிள்ளைகளில் ஓட்டப் போட்டிகளுக்கு மிகவும் திறமையானவர்,

(1) ஹசன் (2) அருண் (3) தேவா

(14) 4 நாட்கள் வேலை செய்த பின் எனது அப்பாவிற்கு ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். மார்ச் மாதம் 1 ஆம் திகதி எனது அப்பாவிற்கு விடுமுறை கிடைத்தது. அதன்படி, மார்ச் மாதம் அப்பாவிற்கு கிடைத்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை,

(1) 7 (2) 6 (3) 8

(15) ○ + ○ + ○ + ○ + ○ + ○ + ○ = □○ இவ்வுருவில் காணப்படும் சகல குறியீடுகளும் பத்திலும் குறைந்த எண்களைக் காட்டுகின்றன. அதன்படி, சதுர வடிவத்தில் காட்டப்பட்டுள்ள எண்,

(1) 2 (2) 3 (3) 4

(16) இவ்வினாவில் 1, 2, 3 ஆகிய சந்தர்ப்பங்களில் எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து, 4 ஆம் சந்தர்ப்பத்தின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

**1 ஆம் சந்தர்ப்பம்** (4) → ▷16 → □20 → (10)

**2 ஆம் சந்தர்ப்பம்** (3) → ▷9 → □12 → (6)

**3 ஆம் சந்தர்ப்பம்** (5) → ▷25 → □30 → (15)

**4 ஆம் சந்தர்ப்பம்** (2) → ▷ → □ → ( )

(1) ▷4 → □6 → (3)

(2) ▷6 → □8 → (4)

(3) ▷10 → □12 → (8)

(17) 20 மாணவர்களுக்கிடையே பகிர்வதற்காக 12 தோடம்பழங்களும் 6 மாம்பழங்களும் வழங்கப்பட்டன. ஐந்து மாணவர்கள் இரு பழங்கள் வீதம் பெற்றுக்கொண்டனர். ஏனைய மாணவர்கள் ஒரு பழம் வீதம் பெற்றுக்கொண்டனர். அதன்படி, ஒரு பழத்தையாவது பெற்றுக்கொள்ளாத மாணவர்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 8 (3) 7

(18) "எனது சகோதரிகளில் அதிகமானவர்கள் என்னை விட இளையவர்கள் ஆவர்." அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) எனக்கு சகோதரர்கள் இல்லை (2) நான் ஒரு பெண் பிள்ளை

(3) என்னை விட மூத்த சகோதரிகள் இருக்கின்றனர்.

(19) "அனேகமான மனிதர்கள் தமது சொந்த வாகனங்களில் பயணம் செய்யாது பேருந்துகளில் பயணம் செய்கின்றனர்." இதற்குரிய பிரதான காரணமாக இருக்கக்கூடியது,


(1) வெகுவிரைவில் பயணம் செய்யலாம் என்பதாகும்.

(2) பேருந்தில் பயணம் செய்வது மிகவும் பாதுகாப்பானது என்பதாகும்.

(3) பேருந்தில் குறைந்த செலவில் பயணம் செய்யலாம் என்பதாகும்.


kalvi.lk

சுட்டெண்:-..........................................

(20) 


இரு சீசோக்களின் மீது நின்றுகொண்டிருக்கும் மூன்று பிள்ளைகளை உரு A, உரு B காட்டுகிறது. இரு சீசோக்களும் சமநிலையுடையது. ஒவ்வொரு பிள்ளையினதும் நிறை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதினால் கிடைப்பது,

(1) சித்ரா - பாத்திமா - பரானா (2) பாத்திமா - பரானா - சித்ரா (3) சித்ரா - பரானா - பாத்திமா

(21) 







ஓர் இயந்திரத்திலுள்ள மூன்று பற்சில்லுகளை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A, B ஆகிய பற்சில்லுகள் ஒரே திசையில் சுழல்வதோடு, C பற்சில்லு அதற்கு எதிர்த்திசையில் சுழலும்.


(2) A, C ஆகிய பற்சில்லுகள் ஒரே திசையில் சுழல்வதோடு, B பற்சில்லு அதற்கு எதிர்த்திசையில் சுழலும்.

(3) A, B, C ஆகிய மூன்று பற்சில்லுகளும் ஒரே திசையில் சுழலும்.

(22) தரப்பட்டுள்ள வடிவங்களில் மூன்றைச் சேர்த்து ஒரு செவ்வகத்தை அமைக்கலாம். அவ்வடிவங்களைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3)  (4)  (5) 

(1) 2, 4, 1 (2) 4, 5, 2 (3) 3, 5, 1


(23) 

மேலே காணப்படும் உருக்களுள் செங்கோணங்கள் காணக்கிடைக்கும் உருக்களின் எண்ணிக்கை,


(1) 5 (2) 4 (3) 6

(24) சிவகுமார் பயணமொன்று செல்லும்போது அவரின் வலதுக் கைப்பக்கமாக சூரியன் மறைந்ததைக் கண்டார். அதன்படி, அவர் பயணம் செய்தது,

(1) வடக்குத் திசைக்கு (2) கிழக்குத் திசைக்கு (3) தெற்குத் திசைக்கு

(25) 


இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பின்னத்திற்குச் சமனான பின்னமாக நிழற்றப்படாத உரு,

(1)  (2)  (3) 

(26) 3  3 = 9, 5  1 = 4, 4  5 = 9


மேலேயுள்ள இலக்கங்களும் குறியீடுகளுக்கும் இடையிலுள்ள தொடர்பின்படி, பின்வரும் தொடர்புகளுள் சரியானது,

(1) 7  2 = 1  4 (2) 6  2 = 3  7 (3) 5  8 = 2  6

(27) 


வட்ட வடிவக் கடதாசி ஒன்றை மூன்று தடவைகள் மடித்து மூன்று துளைகள் இடப்பட்டுள்ள முறை அருகே காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இக்கடதாசித் துண்டை விரித்துப் பார்த்தால், புலப்படும் துளைகளின் எண்ணிக்கை,

(1) 20 (2) 18 (3) 24

(28) 


இச்சில்லு மூன்று தடவைகள் சுழலும்போது பயணம் செய்யும் தூரம்,

(1) 90cm (2) 120cm (3) 100cm

(29) 



நஸீர் P யிலிருந்து Q வரை பயணித்தான். சிவா X இலிருந்து Y வரை பயணித்தான். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) சிவாவை விட நஸீர் அதிகமான தூரம் பயணித்தான்.

(2) நஸீரை விட சிவா அதிகமான தூரம் பயணித்தான்.

(3) நஸீர், சிவா ஆகிய இருவரும் சமனான தூரம் பயணித்தனர்.

(30) முதலில் தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான நடுப் பகுதியைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்க.



(1)  (2)  (3) 

kalvi.lk

(31) பின்வரும் உரு கொழும்பிலிருந்து ஏனைய நகரங்களுக்கு உள்ள தூரங்களைக் காட்டுகிறது.





மேலேயுள்ள உருவிற்கேற்ப, புத்தளத்திலிருந்து காலிக்கு உள்ள தூரம்,

(1) 258km (2) 401km (3) 240km

(32) அப்பா வீட்டிற்குக் கொண்டு வந்த 36 முட்டைகளில் $\frac{1}{2}$ பங்கு உடைந்திருந்தன. எஞ்சிய முட்டைகளில் $\frac{1}{2}$ பங்கு பழுதடைந்திருந்தன. அதன்படி, மீதியாக இருந்த நல்ல முட்டைகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 9

(33)




ஒரு பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் இவ்வட்ட வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளன.

A - புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாதோரின் எண்ணிக்கை.


B - புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றாதோரின் எண்ணிக்கை.

C - புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றாதோரின் எண்ணிக்கை 8 எனின், புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியோரின் எண்ணிக்கை,

(1) 32 (2) 24 (3) 28

(34)




இவ்வுரு 3 வர்ணங்களில் மாத்திரம் வர்ணம் தீட்டப்பட வேண்டும். எனினும் அருகருகே ஒரே வர்ணம் அமையாதவாறு A, B ஆகிய இரு பகுதிகளுக்கும் தீட்டக்கூடிய வர்ணங்கள்,

(1) A - மஞ்சள்
B - நீலம்

(2) A - சிவப்பு
B - நீலம்


(3) A - மஞ்சள்
B - சிவப்பு


(35) கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளை வரிசைப்படுத்தும்போது சரிநடுவில் வரும் நிகழ்வைத் தெரிவு செய்க.


தேங்காயை உரிக்கிறான் - தேங்காயைத் துருவுகிறான் - தேங்காயைப் பறிக்கிறான் - தேங்காயைப் பிழிகிறான் - தேங்காயை உடைக்கிறான்

(1) தேங்காயைத் துருவுகிறான். (2) தேங்காயை உரிக்கிறான். (3) தேங்காயை உடைக்கிறான்.

(36) தீப்பெட்டியொன்றிலுள்ள கார்ட்போர்ட்களினால் செய்யப்பட்ட இரு பகுதிகளையும் விரிக்கும்போது காணக்கிடைக்கும் முறையைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(37) ஒரு சதுர வடிவான காணியில் ஒரேயளவான தூரத்தில் 16 கம்பித் தூண்கள் நடப்பட்டிருந்தன. அருகருகே நடப்பட்டிருந்த இரு கம்பித் தூண்களுக்கிடையிலான தூரம் 3 மீற்றர் ஆகும். அதன்படி, அச்சதுர வடிவான காணியின் ஒருபக்க நீளம்,

(1) 12m (2) 18m (3) 14m

(38) ஐந்து பிள்ளைகள் விரும்பும் பழவகைகளின் விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | | | | ரம்புட்டான் |
|---|---|---|---|---|
| | | | வாழை | பாத்திமா |
| | | மா | யமுனா | நிஹாரா |
| | கொய்யா | வசந்தா | நிஹாரா | மீனா |
| அன்னாசி | நிஹாரா | பாத்திமா | வசந்தா | யமுனா |

இவ்வட்டவணையின்படி, ஐந்து பழவகைகளையும் விரும்பும் பிள்ளை,

(1) வசந்தா

(2) பாத்திமா

(3) நிஹாரா


(39) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியுங் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி யெங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்

இப்பாடல் எதைப் பற்றி கூறப்படுகிறது?

(1) ஆறு (2) காற்று (3) குளம்

(40) ஒரு பிள்ளை ஒரே நாளில் காலை வேளையில் செய்த நான்கு வேலைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு வேலையும் தொடங்கிய நேரம் கீழேயுள்ள கடிகார முகங்களில் காணப்படுகின்றன. (ஒவ்வொரு வேலையும் செய்யப்பட்ட ஒழுங்கில் தரப்படவில்லை.)



A B C D

ஒரு வேலை முடிந்தவுடன் அடுத்த வேலை ஆரம்பமாகியது. அப்பிள்ளை காலை 9.30 மணிக்கு இறுதி வேலையை முடித்தது. அதன்படி, கூடுதலான நேரம் செய்யப்பட்ட வேலை,

(1) C (2) B (3) D

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்**
**தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**
**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல- 14
# வினாத்தாள் - II

சுட்டெண் :- ........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

உயர்ந்து வளர்ந்த மரங்களில் தொங்கிக்கொண்டிருந்த குரங்குகள் எழுப்பும் சத்தம் சிரிஸ்.... சிரிஸ்.... எனக் கேட்டது. அவை மரத்திற்கு மரம் தாவி திரியும் விதம் அற்புதம். காட்டின் மத்தியில் ஓடித் திரியும் புள்ளி மான்கள். இடையிடையே நடமாடும் பெரிய யானைகள். இவற்றை இரசித்தப்படி நாங்கள் வேகமாக நடந்தோம்.

(i) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள அஃறிணை, பன்மை, பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக. ........................................

(ii) பந்தியில் வந்துள்ள பெயர் அடைமொழிச் சொற்கள் இரண்டை எழுதுக. ........................................

(iii) குரங்கின் தொனி எவ்வாறு கூறப்படும்? ........................................

(iv) “மரத்திற்கு” என்பதன் பன்மை வடிவினை எழுதுக. ........................................

(v) “நடுவில்” என்ற கருத்தைத் தரும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. ........................................

**(02) கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பத்திற்கு மிகப் பொருத்தமான பழமொழியை எழுதுக.**

மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும். :- ........................................

**(03) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயோ என்னுடைய கோப்பை கீழே விழுந்து விட்டது என அம்மா கூறினார்

**(04) பின்வரும் வாக்கியத்தை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.**

அப்பா, தாத்தாவுக்கு வெத்திலை வாங்கிக் குடுத்தார். :- ........................................

**(05) ஒரு பிள்ளை பற்றிய விபரம் பின்வருமாறு,**

தர்மலிங்கம் பாலா கண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவனாவான். அவன் இலக்கம் 10, இரத்தினபுரி வீதி, கண்டி எனும் இடத்தில் வசிப்பவனாவான். அவனுக்கு இரண்டு அக்காமார்களும், ஒரு தம்பியும் உள்ளனர். கிரிக்கெட் விளையாட்டிற்கு விருப்பமுடையவன். அவன் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி பிறந்துள்ளான். தயாளன் தர்மலிங்கம் இவனின் தந்தை ஆவார். சிவலிங்கம் சித்ரா இவனின் தாயாவார். தர்மலிங்கம் பாலா தொடர்பான மேலே தரப்பட்டுள்ள விபரங்களின்படி, பின்வரும் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துக.

(i) முழுப் பெயர் :-

(ii) முகவரி :-

(iii) பிறந்த திகதி :-

(iv) பாடசாலையின் பெயர் :-

(v) கற்கும் தரம் :-

(vi) தந்தையின் பெயர் :-

(vii) தாயின் பெயர் :-

(viii) சகோதர சகோதரிகளின் எண்ணிக்கை :-

(ix) விருப்பமான விளையாட்டு :-

**(06) பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள மூன்று சொற்களின் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு திருத்திப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

உலகில் எந்த மூழையிலும் ஒரு சம்பவம் நிகலும்போது அதனை அப்படியே நேரடியாகவும் உடணடியாகவும் நம் கண்களுக்கு கொண்டு வரும் சாதனம் தொலைக்காட்சி.

(i) ........................................ (ii) ........................................ (iii) ........................................

kalvi.lk

**(07) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

(i) எசமான் :- ............................................................ (ii) பேத்தி :- ............................................................

**(08) கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்கவும்.**

தொலைக்காட்சி என்பது ஒரே நேரத்தில் நம் கண்கள் மற்றும் காதுகளினால் தகவல்களைப் பெறும் ஓர் ஊடகம். தற்போது தொலைக்காட்சி வீடுகளிலும் வைத்தியசாலைகளிலும் பிற நிறுவனங்களிலும் காணப்படுகிறது. தொலைக்காட்சி இரவு மற்றும் பகல் வேளைகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறது.

இப்பந்திக்கேற்ப,

(i) இடப்பெயர்கள் இரண்டை எழுதுக. ............................................................

(ii) சினைப்பெயர்கள் இரண்டை எழுதுக. ............................................................

(iii) காலப்பெயர்கள் இரண்டை எழுதுக. ............................................................

**(09) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள உயிர்க்குறிகளை எழுதுக.**

தேநீரைச் சூடாகப் பருகினான்

............................................................

**(10) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.**

(i) close / gate / Please / the :- ............................................................

(ii) am / to / class / I / the / coming :- ............................................................

**(11) பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கில எழுத்தை எழுதுக.**

(i)  :- Ma.........go (ii)  :- Flo...........er

**(12) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**


நான் நாளை வருவேன் :- ............................................................

**(13) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**


ඔබේ වයස කීයද? :- ............................................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

அப்பா வந்தாரா? :- ............................................................


(15) 

**உரு A**



**உரு B**

உரு A இல் நிழற்றப்பட்டுள்ள பின்னத்திற்குச் சமனான பின்னத்தை உரு B இல் நிழற்றிக் காட்டுக.

(16) 

இவ்வுருவில் உருளையொன்றின் $\frac{1}{2}$ பங்கு காட்டப்பட்டுள்ளது. இத்திண்மத்திலுள்ள,


(i) தட்டையான மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது? ........................

(ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .............. (iii) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..............

(17) கீழே தரப்பட்டுள்ள 24 மணித்தியாலக் கடிகாரத்தின் நேரத்தை 12 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.


**16:50** :- ............................................................

(18) A நகரத்திலிருந்து B நகரத்திற்கு உள்ள தூரம் 12km 700m ஆகும். B நகரத்திலிருந்து C நகரத்திற்கு உள்ள தூரம் 15km 940m ஆகும். ஒருவர் A நகரத்திலிருந்து B நகரத்தின் ஊடாக C நகரத்திற்குச் சென்றார். அதன்படி, அவர் சென்ற மொத்தத் தூரம் யாது? ............................................................

(19) 


"முப்பதாயிரத்து இருநூற்று நான்கு" எனும் எண்ணை இவ்வெண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.

(20) இவ்வுருவில் சமச்சீர் அச்சுக்களை வரைந்துக் காட்டுக.



(21) பென்சில் ஒன்றின் விலை ரூபாய் 8.75 ஆகும். பேனை ஒன்றின் விலை ரூபாய் 15.75 ஆகும். அதன்படி, பென்சில் ஒன்றையும் பேனை ஒன்றையும் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 20.00 நாணயத் தாள்கள் இரண்டைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? ............................................................


(22) பிள்ளையொன்று P எனும் இடத்திலிருந்து 100m வடகிழக்குத் திசைக்குச் சென்று, அங்கிருந்து 200m வடமேற்குத் திசைக்குச் சென்று, அங்கிருந்து 100m தென்மேற்குத் திசைக்குச் சென்றது. அதன்படி, தற்போது P எனும் இடம் இருப்பது பிள்ளை இருக்கும் இடத்திற்கு எத்திசையிலாகும்? ............................................................

kalvi.lk


(23) விடையாக 6281 ஐ பெற்றுக்கொள்வதற்கு 3405 உடன் கூட்ட வேண்டிய எண் யாது? ............................................................

சுட்டெண்:-.........................................

(24) கம்பியொன்றின் நீளம் 12m 60cm ஆகும். அதிலிருந்து 3m 40cm ஐ கொண்ட ஒரேயளவான 2 கம்பித் துண்டுகள் வெட்டி எடுத்தால், மீதியாகவுள்ள கம்பித் துண்டின் நீளம் யாது? ..................................................................................

(25) 

இவ்வுருவில் நிழற்றியுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? ..........................................


(26) 

நெய்யரியில் இருக்கும் உருவின் பகுதியைச் சமச்சீரான உரு கிடைக்குமாறு பூரணப்படுத்துக.

(27) சதுரமுகியினதும், கனவுருவினதும் ஒத்த தன்மைகள் மூன்றை எழுதுக.

(i) ......................................................................................... (ii) .........................................................................................

(iii) .........................................................................................

(28) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும்,

(i) செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..........................

(ii) செங்கோணத்தை விடக் குறைந்தக் கோணங்களின் எண்ணிக்கை யாது? ..................

(29) வருடமொன்றில் 30 நாட்களைக் கொண்ட மாதங்களின் எண்ணிக்கையை விட 31 நாட்களைக் கொண்ட மாதங்களின் எண்ணிக்கை எவ்வளவு கூடுதலாகும்? ..................................................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**


(30) எதிரியைத் தனது வாலின் மூலம் தாக்கக்கூடிய பிராணி அல்லாதது,
(1) தேள் (2) கபரகொயா (3) பல்லி

(31) துருப்பிடிக்கும் ஓர் உலோகம்,
(1) செப்பு (2) இரும்பு (3) அலுமினியம்

(32) இலங்கையில் புழக்கத்திலுள்ள தொலைபேசி இலக்கத்தின் எண்களின் எண்ணிக்கை,
(1) 10 (2) 8 (3) 11

(33) இலங்கையின் அரச இலச்சினையில் ஒரே கருத்தைத் தரும் இரு குறியீடுகள் உள்ளன. அவ்விரு குறியீடுகளாவன,
(1) வாளேந்திய சிங்கம், நெற்கதிர்கள் (2) சூரியன், சந்திரன் (3) நிறைகுடம், பூவிதழ்கள்

(34) இலைகளுக்கிடையே தண்ணீர் தேங்கி நுளம்புகள் பெருகக்கூடிய ஒரு தாவரம்,
(1) அன்னாசி (2) ஈரப்பலா (3) பலா

(35) அலுமாரியிலுள்ள புத்தகங்களை சேதப்படுத்தும் பிராணி,
(1)  (2)  (3) 

(36) பின்வரும் பிராணிகளுள் மிகப் பெரிய முட்டையிடும் பிராணி,
(1) மயில் (2) வாத்து (3) தீக்கோழி

(37) இலங்கை உலகக் கிண்ணத்தை வென்றெடுத்த விளையாட்டு,
(1) காற்பந்தாட்டம் (2) கிரிக்கெட் (3) கரப்பந்தாட்டம் (வொலிபோல்)

(38)  உருவில் காட்டப்பட்டுள்ள முறையிலான வாலைக் கொண்ட பிராணி,
(1) குதிரை (2) யானை (3) புலி

(39) தலையைத் திருப்பாமல் கண்களை மட்டும் திருப்பி சுற்றுப்புறத்தைப் பார்க்கக்கூடிய பிராணி,
(1) மைனா (2) காகம் (3) நாய்

(40) தனது குட்டிகளை வயிற்றுப் பையில் பாதுகாக்கும் பிராணி,
(1) குரங்கு (2) கங்காரு (3) சிலந்தி

(41) இங்கிலாந்தில் பிறந்து இலங்கையில் குடியேறிய விஞ்ஞானி,
(1) திரு. ஆதர் சி. கிளார்க் (2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி (3) சேர் டீ. பீ. ஜயதிலக்க

(42) தலையின் இரு பக்கங்களிலும் கண்கள் அமையாது தலையின் முன் பக்கத்தில் கண்கள் அமைந்துள்ள பறவை,
(1) பருந்து (2) ஆந்தை (3) மரங்கொத்தி

(43) வேறு கொடிகளுடன் தேசியக் கொடியை ஏற்றும் சந்தர்ப்பங்களில், பின்பற்ற வேண்டிய முறைகளில் பிழையான முறையைத் தெரிவு செய்க.
(1) தேசியக் கொடியை விட ஏனைய கொடிகளை மிக உயரத்தில் ஏற்றக் கூடாது.
(2) ஏனைய கொடிகளுக்கு சரிநடுவில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும்.
(3) தேசியக் கொடியை ஏற்றுவதற்கு முன் ஏனையக் கொடிகளை ஏற்ற வேண்டும்.

kalvi.lk

(44) நொச்சி, வில்வம், வேம்பு, ஆடாதோடை ஆகிய தாவரங்கள் மிகவும் பயன்தருவது,

(1) ஔடதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு (2) நிழலைப் பெற்றுக்கொள்வதற்கு (3) உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு


(45) மரங்களின் தண்டுகளின் மீது வளரும் தாவர வகைகள் அடங்கிய விடை,

(1) நொச்சி, சதைகரைச்சான் (2) ஓக்கிட், கடுபுல் (3) குப்பைமேனி, கற்றாளை

(46) பச்சை நிற உடலைக் கொண்ட பூச்சிகள்,

(1) வீட்டு ஈ, கறையான் (2) தும்பி, இராமபாணம் (3) கும்பிடுபூச்சி, வெட்டுக்கிளி

(47) இலங்கை மின்சார சபையின் இலச்சினை,

(1) 

(2) 

(3) 

(48) 

இவ்வீதிச் சமிக்ஞையினால் உணர்த்தப்படுவது,

(1) முன்னால் செல்க (2) முன்னால் சுற்று வளைவு (3) முன்னால் ஒளிச் சமிக்ஞைகள்

(49) நில்வள கங்கை கடலுடன் கலக்கும் இடம்,


(1) அம்பாந்தோட்டை (2) மாத்தறை (3) களுத்துறை


(50) பொருத்தமற்ற நிறத்தையுடைய வித்தை தெரிவு செய்க.

(1) குன்றிமணி - சிவப்பு மற்றும் மஞ்சள் (2) பயறு - பச்சை (3) பூசணி - இளம்மஞ்சள்

(51) நீரைக் கொண்டுள்ள 3 கண்ணாடிப் பாத்திரங்களில் தேங்காயெண்ணெய், வினாகிரி, மண்ணெண்ணெய் ஆகியன ஊற்றப்பட்டுள்ள முறைகளை பின்வரும் உருக்கள் காட்டுகின்றன. அதன்படி, பிழையாக வரையப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.

(1) 


(2) 


(3) 


(52) சைக்கிள் ஒன்றின் பற்சில்லுச்சோடி இணைக்கப்பட்டுள்ள சரியான முறையினைக் காட்டும் உரு,

(1) 

(2) 

(3) 

(53) A  B 

A, B ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள தாவரங்கள்,

(1) A - காளான் B - நாகதாளி (2) A - வட்டக்கண்ணி B - கரும்பு

(3) A - சேம்பு B - கற்றாளை

(54) பௌத்த சமயத்தவரின் பண்டிகை அல்லாதது,

(1) பொசொன் (2) வெசாக் (3) நத்தார்

(55) குயில் முட்டையிடுவது,

(1) பருந்தின் கூட்டில் (2) காகத்தின் கூட்டில் (3) கிளியின் கூட்டில்

(56) சந்தையில் கொள்வனவு செய்த குளிர்பான போத்தலின் மேலுறையில் சிவப்பு நிற வட்டமொன்று அச்சிடப்பட்டிருந்தது. அவ்வட்டத்தினால் கருதப்படுவது,

(1) சீனி அதிகமாக உள்ளது (2) சீனி மத்திம அளவில் உள்ளது (3) சீனி குறைந்தளவில் உள்ளது

(57) பின்வரும் பூக்களிடையே துர்நாற்றம் வீசும் பூ,

(1) நாகலிங்கம் (2) நித்தியகல்யாணி (3) கீடாரம்

(58) உடலின் வளர்ச்சிக்கு உதவும் காய்கறி வகை,

(1) பாகற்காய் (2) சிறகவரை (3) பூசணி

(59) காட்டில் வழி தவறிய ஒருவருக்குத் திசையை அறிந்துகொள்வதற்கு தேவையான உபகரணம்,

(1) திசையறிகருவி (2) காற்றுத்திசைகாட்டி (3) அனிமாமானி

(60) **"பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும் வழியில் கடும்மழையில் அகப்பட்டுக் கொண்ட நான்...." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

(3) ..................................................................................................................

kalvi.lk